بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 16, May 2014 (Tamil)**

## இறைவனிடத்தில் தன்னை மாய்த்துக் கொள்ளுதல்

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

சென்ற ஜுமுஆ உரையில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தன்னை மாய்த்துக் கொண்டவாறு திருக்குர்ஆனின் கட்டளைகளை நமக்கு புரிய வைத்தார்கள் என்பது பற்றியும், அல்லாஹ்வின் ஓர் இறைதன்மையை நமக்குப் புரிய வைத்தார்கள் என்பது பற்றியும் கூறப்பட்டது. ஏனெனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மூலமாகவே அன்றி ஓர் இறை கொள்கையின் உண்மையான கருத்தைப் புரியவே முடியாது; திருக்குர்ஆனின் ஞானம் கிடைக்கவும் முடியாது. எனவே**'லா இலாஹ இல்லல்லாஹ்'** என்பதுடன் **'முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்'**என்பதையும் புரிய வேண்டியது அவசியமானதாகும். **முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்** அவர்கள்தான் **லா இலாஹ இல்லல்லாஹ்** என்பதன் உண்மையான, செயல் அளவிலான முன்மாதிரியும் உதாரணமும் ஆவார்கள். எப்படி இருந்தாலும் இன்று நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில மேற்கோள்களை எடுத்துரைப்பேன். அதில் அவர்கள், உண்மையான ஓர் இறை கொள்கை என்பது என்ன? ஓர் இறை கொள்கை என்பதன் உண்மைத்துவம் என்ன? எவ்வாறு செயல்படுவதன் மூலமாக மனிதன் உண்மையான ஓர் இறை கொள்கையுடையவனாக அழைக்கப்பட முடியும் ஆகியவற்றைப் பற்றி எடுத்துக் கூறியுள்ளார்கள்.

சூரத்துந் நாஸ் என்பதன் விளக்கவுரையில் **இலாஹின்னாஸ்** என்பதன் முக்கியத்துவம் பற்றி விளக்கிக் கூறியவாறு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:**

''நான் கூற விரும்புவது என்னவென்றால், இந்த சூராவில் இறைவன் முதலில் **ரப்புன்னாஸ்** எனக் கூறியுள்ளான். பிறகு **மலிகின்னாஸ்** எனக் கூறியுள்ளான். கடைசியில் மனிதனின் உண்மையான குறிக்கோளும், நோக்கமுமாக இருக்கின்ற **இலாஹின்னாஸ்** என்பதை கூறியுள்ளான். எது நோக்கமாகவும் வணக்கத்திற்குரியதாகவும் குறிக்கோளுமாகவும் இருக்கிறதோ அதை **இலாஹ்** என்று கூறுகிறோம். எனவே **லா இலாஹ** என்பதன் பொருள், **லா மஃபூத லீ வலா மக்ஸூத லீ வலா மத்லூப லீ இல்லல்லாஹ்** என்பதாகும். அதாவது அல்லாஹ்வை அன்றி எந்தவொரு குறிக்கோளும் இல்லை; எந்தவொரு நோக்கமும் இல்லை; எந்தவொரு வணக்கத்திற்குரியதும் இல்லை. இதுவே உண்மையான ஓர் இறை கொள்கையாகும். அல்லாஹ்வையே எல்லா புகழுக்கும் போற்றுதலுக்கும் உரியவனாகக் கொள்ள வேண்டும். எத்தனை புகழ்கள் இருக்கின்றனவோ அவை அனைத்தையும் அல்லாஹ்விற்கே உரியதாகக் கொள்ள வேண்டும். அனைத்து புகழ்களும் அல்லாஹ்வின் பக்கமே செல்கின்றன. அவனுக்கே அழகைத் தருகின்றன. இதுவே உண்மையான ஓர் இறை கொள்கையாகும்.''

மேலும் **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''எல்லா குறிக்கோள்களையும் நிறைவேற்றுபவன், எல்லா நோய்களையும் குணப்படுத்துபவன் அந்த ஓர் இறைவனே ஆவான். **'லா இலாஹ இல்லல்லாஹ்'** என்பதன் பொருள் இதுவேயாகும். சூஃபிகள் **இலாஹ்** (வணக்கத்திற்குரியவன்) என்ற சொல்லிற்கு **மஹ்பூப்,**(அன்பிற்குரியவன்) **மக்ஸூது,**(குறிக்கோளாகக் கொள்ளத் தகுந்தவன்) **மஃபூது** (வணக்கத்திற்குரியவன்) என பொருள்

கொண்டிருக்கின்றனர். சந்தேகமின்றி உண்மை அதுவேயாகும் . மனிதன் முழுமையயான முறையில் செயல்படாத வரை அவனிடத்தில் இஸ்லாம் பற்றிய அன்பும் மகத்துவமும் நிலைபெறுவதில்லை.''

**ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்:**

**லா இலாஹ இல்லல்லாஹ்** என்பதன்படி உண்மையான பொருளில் செயல்பட்டால்தான் இஸ்லாத்தைப் பற்றிய அன்பு, கண்ணியம் நிலைபெற முடியும்; இல்லையென்றால் வெற்றுபேச்சுகள்தான். ஓர் இறை கொள்கையின் உண்மைநிலை மற்றும் ஓர் இறைநம்பிக்கையாளரின் தகுதி எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றி **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''எவர்கள் அதிகாரிகளின் பக்கம் குனிந்தவர்களாக இருக்கின்றார்களோ அவர்களிடமிருந்து பட்டத்தை அல்லது சன்மானத்தைப் பெறுகின்றார்களோ அவர்களின் உள்ளத்தில் (அதிகாரிகளாகிய) அவர்களைப் பற்றிய கண்ணியம் இறைவனைப் பற்றிய கண்ணியத்தைப் போன்று நுழைந்து விடுகின்றது. அவர்கள் (அதிகாரிகளாகிய) அவர்களை வணங்குபவர்களாக ஆகிவிடுகின்றார்கள். மேலும் இதுதான் ஓர் இறை கொள்கையினை நாசமாக்கி விடுகிறது.''

**ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்:** அதாவது ஓர் இறை கொள்கையின் தகுதியை முடிவுக்குக் கொண்டு வந்து விடுகிறது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''மேலும் மனிதனை அவனுடைய உண்மையான குறிக்கோளை விட்டும் விலக்கி தொலைவில் தூக்கி எறிந்து விடுகிறது. எனவே காரணிகளைப் பயன்படுத்துவதிலும் ஓர் இறை கொள்கையிலும் முரண்பாடு இருக்கக் கூடாது; மாறாக, எல்லாம் தத்தமது இடத்தில் இருக்க வேண்டும். கடைசியில் ஓர் இறை கொள்கையில் சென்று முடிய வேண்டும் என நபிமார்கள் போதித்துள்ளனர். (நபிமார்களாகிய) அவர்கள் மனிதனுக்கு எல்லா கண்ணியங்களையும், எல்லா வசதிகளையும், எல்லா தேவைகளையும் நிறைவேற்றுவது இறைவன்தான் என்பதை கற்றுக் கொடுக்க விரும்புகின்றனர். எனவே இதற்கு போட்டியாக ஒருவரை நிலைநிறுத்தினாலும் இரண்டு முரண்பட்ட ஆற்றல்களினால் ஒன்று அழிந்து போய்விடுகின்றது. எனவே இறைவனின் ஓர் இறைதன்மை நிலைபெற வேண்டும் என்பது முதன்மையானதாகும். **காரணிகளை எடுத்துக் கொள்ளுங்கள்; ஆனால் காரணிகளை இறைவனாக்கிக் கொள்ளாதீர்கள்.''**

**ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்:** காரணிகளை மேற்கொள்வது அவசியமானதாகும். அல்லாஹ் என்ன வழிமுறைகளை, காரணிகளை உருவாக்கித் தந்திருக்கிறானோ அவற்றை பயன்படுத்துங்கள்; ஆனால் அவற்றை இறைவனாக்கி விடாதீர்கள். ஓர் இறை கொள்கைக்கு முதன்மை வழங்குங்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''பயனும், நஷ்டமும் இறைவனின் கையிலேயே இருக்கிறது என மனிதன் கருதும்போது அந்த ஓர் இறை கொள்கையிலிருந்தே இறைவனோடு ஓர் அன்பு உருவாகி விடுகிறது. அவனே உண்மையான அருள்பாலிப்பவன்; ஒவ்வோர் அணுவும் அவனிடத்திலிருந்தே தோன்றுகின்றன; எவரும் இடையில் வருவதில்லை எனக் கருதும் இந்த நிலையை மனிதன் அடையும்போது **அவன் தவ்ஹீதை (ஓர் இறை கொள்கையை) கொண்டவன் என அழைக்கப்படுகின்றான்.''**

**ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்:** இறைவனை முழுமையாக சார்ந்திருக்கும் இந்த நிலையை அடையும்போது - இடையில் எவரும் இல்லாதிருக்கும்போதுதான் அவர் ஓர் இறை கொள்கையுடையவர் என அழைக்கப்படுவார்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''சுருக்கமாக, **ஓர் இறை கொள்கையின் ஒரு நிலை,** மனிதன் கற்களையோ, அல்லது மனிதர்களையோ அல்லது வேறு எதனையும் இறைவனுக்கு இணையாக்காமல் இருப்பதாகும். இன்னும் சொல்லப்போனால், அவற்றை இறைவனாக ஆக்குவதை விட்டும் தமது வெறுப்பைக் காட்டுவதாகும். **இன்னொரு நிலை,** என்னவெனில், காரணிகளை கைக்கொள்ளும் நிலையிலிருந்து கடந்து செல்லாதிருப்பதாகும்.''

**ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்:** அதாவது, காரணிகளின் மீது அதிகமாக அழுத்தம் கொடுக்கக் கூடாது. அதிகமாக எல்லை கடந்து விடக் கூடாது. அவற்றின் மீது மட்டுமே தனது எல்லா நம்பிக்கையையும் வைத்து விடக் கூடாது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''**(ஓர் இறை கொள்கையின்)மூன்றாவது வகை** என்னவெனில், தன்னையும் தனது குறிக்கோள்களையும் இடையிலிருந்து அகற்றி விடுவதாகும்.''

**ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்:** ஓர் இறை கொள்கையை நிலைநாட்டுவதற்கான மூன்றாவது வழிமுறை, தனது நஃப்ஸையும் மாய்த்து விடுங்கள். அதன் சொந்த குறிக்கோள்கள் என்னென்ன உண்டோ அவை அனைத்தையும் இல்லாதொழித்து விடுங்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''**(ஓர் இறை கொள்கையின்)மூன்றாவது வகை** என்னவெனில், தன்னையும் தனது குறிக்கோள்களையும் இடையிலிருந்து அகற்றி விடுவதாகும். அவற்றை மறுத்து விடுவதாகும். சில நேரத்தில் மனிதனுடைய பார்வையில் தனது சிறப்பும், ஆற்றலும் இருக்கிறது.''

**ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்:** மனிதன் பெரும்பாலும் தனது சில செயல்களில் தனது சிறப்புகள் மற்றும் ஆற்றலில் மீது நம்பிக்கை வைக்கின்றான். அவனிடத்தில் அந்த சிறப்பும் ஆற்றலும் இருக்கிறது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''சில நேரத்தில் மனிதனிதனுடைய பார்வையில் தனது சிறப்பும், ஆற்றலும் இருக்கிறது. இன்ன நன்மையை நான் எனது ஆற்றலினால் செய்தேன் என நினைக்கிறான்; மனிதன் தனது ஆற்றலின் மீது நம்பிக்கை வைக்கிறான். எல்லா செயல்களையும் தன்னால் ஏற்பட்டது எனக் கருதுகின்றான்.மனிதன் தனது ஆற்றல்களையும் மறுத்து விடும்போதுதான் அவன் ஓர் இறை கொள்கையுடையவன் ஆகின்றான்...... அதாவது நபியே! நீர் கூறுவீராக: நீங்கள் அல்லாஹ்வை நேசிக்கின்றீர்கள் என்றால் என்னைப் பின்பற்றுங்கள்; அல்லாஹ் உங்களை தனது அன்பிற்குரியவனாக ஆக்கிக் கொள்வான். **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றுவது மனிதனை நேசத்திற்குரிய இறைவன் வரை கொண்டு சென்று விடுகிறது.** இதிலிருந்து தெரிவது என்னவென்றால், அன்னார் (ஸல்) முழுமையான ஓர் இறை கொள்கை கொண்டவர் என்பதற்கான முன்மாதிரியாக விளங்கினார்கள். பிறகு யூதர்கள் ஓர் இறை கொள்கையை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாக இருந்தால் இப்படிப்பட்ட ஓர் இறை கொள்கையுடையவரிடமிருந்து விலகி இருப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. பிறகு இறைவனின் காத்தமுர் ருஸூல் (இறைதூதர்களின் சிறந்தவர்) - ஐ மறுப்பதும் பகைமை கொள்வதும் அபாயகரமானது என்பதை அவர்கள் நினைவிற்கொண்டிருக்க வேண்டும்.''

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அந்த யூதர்கள் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''ஆனால் அவர்கள் பொருட்படுத்தவில்லை. அவர்களின் வேதத்தில் (ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைப் பற்றிய முன்னறிவிப்பு இருந்தும் அவர்கள் நிராகரித்து விட்டனர். இதற்குக் காரணம் (திருக்குர்ஆன் கூறுவது போன்று) 'அவர்களின் உள்ளங்கள் கடினமாகி விட்டன' என்பதைத் தவிர வேறு என்ன இருக்க முடியும்?''

ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப் பற்றி தவறான கொள்கையை எடுத்து வைக்கப்படும்போது **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:**

''இஸ்லாம் எத்தகைய தூய, கலப்பற்ற ஓர் இறை கொள்கையை எடுத்து வந்ததென்றால், அதன் முன்மாதிரியைக் கூட மற்ற மதங்களில், மார்க்கங்களில் காண முடிவதில்லை. முந்தைய வேதங்களிலும் இறைவனின் ஓர் இறை கொள்கை பற்றி கூறப்பட்டுள்ளது என்றாலும், எல்லா நபிமார்கள் அலைஹிமுஸ் ஸலாம் அவர்களின் தோற்றத்தின் நோக்கமும் குறிக்கோளும் ஓர் இறை கொள்கையை பரப்புவதாகவே இருந்தது. ஆயினும் எந்த வகையில், வழிமுறையில் காத்தமுல்

அன்பியா (ஸல்) அவர்கள் ஓர் இறை கொள்கையை கொண்டு வந்தார்களோ மேலும் எந்த கோணத்தில் திருக்குர்ஆன் ஓர் இறை கொள்கையின் படித்தரங்களை மிகத் தெளிவாக விளக்கிக் கூறியிருக்கிறதோ அது வேறு எந்த வேதத்திலும் ஒருபோதும் காணக் கிடைக்கவில்லை என்பது எனது நம்பிக்கையாகும்.''

எவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை எதிர்க்கின்றார்களோ ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணத்தை ஏற்றுக் கொள்ளவில்லையோ அவரை இறைவனுக்கு இணையாக அவர்கள் நிறுத்தியுள்ளார்களோ - அப்படி இருந்தும் தம்மை முஸ்லிம்கள் என்று கூறிக் கொள்கிறார்களோ அப்படிப்பட்டவர்களைப் பற்றி **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''ஆனால் அத்தகைய தூய நீரூற்றை (முஸ்லிம்களாகிய) இவர்கள் களங்கப்படுத்த விரும்பியபோது, பிறகு இஸ்லாத்தை அவமதிப்பதில் வேறு என்ன எஞ்சியிருக்கிறது? இதில் அவர்களுடைய துர்பாக்கியம் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த உண்மையான இஸ்லாம் எடுத்து வைக்கப்படும்போது - நீங்கள் தவறிழைக்கிறீர்கள் என அவர்களுக்கு நிரூபித்துக் காட்டப்படும்போது எங்கள் மூதாதையர்கள் அப்படித்தான் நம்பி வந்துள்ளனர் எனக் கூறுகின்றனர். ஆனால் இப்படிக் கூறி விடுவதனால் அவர்கள் தம்மை குற்றமற்றவர்களாக ஆக்கிக் கொள்ள முடியுமா? அவ்வாறன்று! மாறாக, திருக்குர்ஆனுக்கு ஏற்ப, இறைவனின் தொன்மையான நடைமுறைக்கேற்ப (அவர்களின்) இந்தக் கூற்றின் மூலமும் அவர்கள் மீது ஒரு சான்று முழுமை பெறுகிறது. ஏனெனில் இறைவனால் அனுப்பட்டவர், இறைதூதர் வந்தபோதெல்லாம் எதிரிகள் அவர்களின் போதனையைக் கேட்டு இதைத்தான் கூறினார்கள். அதாவது **மா ஸமிஃனா பிஹாஸா ஃபீ ஆபாயினல் அவ்வலீன்** எனக் கூறினர். அதாவது நாங்கள் எங்கள் மூதாதையர்களிம் இந்த மாதிரியான சம்பவத்தை கண்டதில்லை; கேட்டதில்லை.'' (23:25காண்க)

ஓர் இறை கொள்கை பற்றியும், காரணிகளை நம்புவதன் மூலம் இணைவைத்தல் பற்றியும் குறிப்பிட்டவாறு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''ஓர் இறை கொள்கை என்பது வெறும் நாவினால் **'லா இலாஹ இல்லல்லாஹ்'** என்று கூறுவதற்குப் பெயரல்ல. மாறாக, ஓர் இறை கொள்கை என்பதன் பொருள், இறைவனைப் பற்றிய மகத்துவம் உள்ளத்தில் நன்றாக பதிந்து விட வேண்டும். மேலும் அதற்கு முன்பாக மற்ற எந்தவொரு பொருளின் மகத்துவமும் உள்ளத்தில் இடம் பெறக் கூடாது. ஒவ்வொரு செயல், அசைவு, அசையாமை ஆகியவை அல்லாஹ்வின் பக்கமே திரும்புகின்றன எனக் கருத வேண்டும். மேலும் எல்லா விஷயத்திலும் அவனையே நம்ப வேண்டும். வேறு அல்லாஹ் அல்லாத எவற்றின் மீதும் எவ்விதமான பார்வையும், நம்பிக்கை வைத்தலும் ஒருபோதும் இருக்கக் கூடாது. இறைதன்மையில், பண்பில் எவ்விதமான இணைவைத்தலையும் ஆகுமானதாகக் கொள்ளக் கூடாது. சுருக்கமாக, இப்போது படைப்பினங்களை வணங்குவதை எவரும் ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் காரணிகளை வணங்கும் இணைவைத்தலை பெரும்பாலார் புரிவதில்லை. உதாரணமாக, ஒரு விவசாயி நான் விவசாயம் செய்யாத வரை - அறுவடை செய்யாத வரை வாழ்க்கை நடைபெறாது என கருதுகின்றார்; அவ்வாறே ஒவ்வொரு தொழில் செய்பவருக்கும் அவர் செய்யும் தொழிலின் மீது நம்பிக்கை இருக்கிறது. இதை நான் செய்யாவிட்டால் பிறகு வாழ்க்கை நடத்துவது சாத்தியமில்லை எனக் கருதி வைத்துள்ளார். **இதற்குப் பெயர் காரணிகளை வணங்குதல் என்பதாகும்.** மேலும் இறைவனுடைய வல்லமைகளின் மீது நம்பிக்கை இல்லாததே இதற்குக் காரணமாகும். தொழில் என்பதெல்லாம் ஒரு புறமிருக்கட்டும். **இறைவனுடைய கட்டளை இல்லாத வரை வாழ்வாதாரங்களான தண்ணீர், காற்று, உணவு ஆகியவையும் மனிதனுக்கு பயன் தர முடியாது.** ''

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறங்கிய ஓர் இறையறிவிப்பு, **'அன்த மின்னீ வ அனாமின்க'** என்பதாகும். இதன் பொருள், நீர் என்னைச் சார்ந்தவராக இருக்கின்றீர்; நான் உம்மைச் சார்ந்தவராக இருக்கின்றேன். இது ஓர் இறை கொள்கைக்கு மாறுபட்டது என மக்கள் ஆட்சேபணை செய்கின்றனர் என ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் கேள்வி கேட்டபோது அவர்கள் கூறினார்கள்:

**''அன்த மின்னீ (நீர் என்னைச் சார்ந்தவராக இருக்கின்றீர்)** என்பது முற்றிலும் தெளிவானதாகும். இதில் எவ்விதமான ஆட்சேபணையோ குற்றச்சாட்டோ இருக்க முடியாது. **நான்**

**தோன்றியது அல்லாஹ்வின் அருளினாலேயே ஆகும்.**

அதாவது, **'அந்த மின்னீ'** என்பதன் பொருள், என்னவெல்லாம் கிடைத்தனவோ அவையெல்லாம் அல்லாஹ்விடமிருந்தே கிடைத்தன; அல்லாஹ்வே வழங்கினான் என்பதாகும். பிறகு **'வ அனாமின்க'** என்பதைப் பற்றி **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''இதன் உண்மையைப் புரிந்து கொள்வதற்கு நாம் நினைவிற்கொள்ள வேண்டிய விஷயம் என்ன வென்றால், எந்த மனிதன் தன்னை முற்றிலும் இழந்த நிலையில் முழுமையான படித்தரத்தை அடைந்து ஒரு புதிய வாழ்வையும், தூய வாழ்வையும் பெற்று விடுகின்றானோ அப்படிப்பட்டவரை நோக்கி இறைவன், **'அந்த மின்னீ' (நீர் என்னைச் சார்ந்தவராக இருக்கின்றீர்)** எனக் கூறுகிறான். அது அவர் இறைவனுடைய நெருக்கம், இறைஞானம் ஆகியவற்றின் உண்மையைப் பற்றி புரிந்து கொண்டதற்கான சான்றாகும். மேலும் அந்த மனிதன் இறைவனின் ஓர் இறை கொள்கை, மகத்துவம், கம்பீரம் ஆகியவை வெளிப்படுவதற்குக் காரணமாக அமைகின்றார். அவர் அல்லாஹ்வின் இருப்பிற்கான ஒரு கண்கண்ட சாட்சியாகவும் உயிருள்ள சாட்சியாகவும் விளங்குகின்றார். இந்த வகையில் இந்த கோணத்தில் அவர் ஒரு வகையில் அல்லாஹ்வின் தோற்றமாகவும் அவனிடத்தில் மாய்த்துக் கொண்டவாறும் வெளிப்படுகிறார். மேலும் அல்லாஹ்வின் தோற்றத்தின் ஒரு கண்ணாடியாகத் திகழ்கின்றார். அவருடைய தோற்றம் இறைவனை வெளிப்படுத்தும் கண்ணாடியாக இருக்கும்போது அல்லாஹ் அவருக்காக **'வ அனாமின்க' (நான் உம்மைச் சார்ந்தவனாக இருக்கிறேன்)** என்று கூறுகிறான். மேலும் எந்த மனிதருக்கு**'அனாமின்க' (நான் உம்மைச் சார்ந்தவனாக இருக்கிறேன்)** என்ற ஓசை வருகிறதோ அவர் (உலகத்தில்) இறைவணக்கத்தின் எல்லா அடையாளமும் அழிந்து விடும்போது வருகின்றார். இந்த காலத்திலும் தீமைகள் மிக அதிகமாகி விட்டன. இறைவனை புரிந்து கொள்கின்ற, இறைவனை அடைகின்ற வழிகள் தென்படுவதில்லை. எனவே இந்த இயக்கத்தை அல்லாஹ் நிலைநாட்டியுள்ளான். அல்லாஹ்வைப் பற்றி கவனமற்றவர்களாக, அறியாதவர்களாக இருப்பவர்களுக்கு அவனைப் பற்றி நான் தெரிவிப்பதற்காக அவன் தனது அருளினாலும் கருணையினாலும் என்னை அனுப்பியுள்ளான். தெரிவிப்பதற்காக மட்டுமல்லாமல் எவர்கள் உண்மை,பொறுமை, நன்றியுணர்வு ஆகியவற்றுடன் இதன் பக்கம் வருகிறார்களோ அவர்களுக்கு இறைவனைக் காட்டிக் கொடுப்பதற்காகவும் அவன் என்னை அனுப்பியுள்ளான். இந்த அடிப்படையில் அவன் **'அந்த மின்னீ வ அனாமின்க'**எனக் கூறியுள்ளான்.''

''நான் மீண்டும் கூறுகிறேன். இஸ்லாத்தின் உண்மையான ஆணிவேர் ஓர் இறை கொள்கையாகும். அதாவது இறைவனைத் தவிர வேறொன்றும் மனிதனுள் இருக்கக் கூடாது. மேலும் இறைவனையும் இறைதூதர்களையும் பழித்துரைப்பதாக இருக்கக் கூடாது. எந்தவொரு சோதனை, துன்பம் அவருக்கு வந்தாலும் - எந்தவொரு துக்கம் கஷ்டம் அவருக்கு வந்தாலும் அவருடைய வாயிலிருந்து முறையீடு வெளிப்படக் கூடாது. மனிதனுக்கு வரும் சோதனை அவனுடைய நஃப்ஸினால் வருகின்றது. அல்லாஹ் அநீதி இழைப்பதில்லை. ஆயினும் **உண்மையாளர்களுக்கும் எப்போதாவது சோதனை வருகிறது; ஆனால் மற்றவர்கள் அதனை சோதனை எனக் கருதுகிறார்கள். உண்மையில் அது சோதனை அல்ல. அது இறையருள் என்பதற்கான அறிவிப்பாக இருக்கிறது.**அதன் மூலமாக அவர்களுக்கு இறைவனுடனுள்ள தொடர்பு அதிகமாகின்றது. அவர்களின் அந்தஸ்து உயர்கின்றது. அதனை மற்றவர்கள் புரிவதில்லை. ஆனால் எவர்களுக்கு அல்லாஹ்வுடன் தொடர்பு இல்லையோ அவர்களின் செயல்களின் விளைவு அவர்களுக்கு ஏதாவது சோதனையைக் கொண்டு வரும்போது அவர்கள் வழிகெட்டு விடுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்காகத்தான் **'ஃபீ குலூபிஹிம் மரழுன் ஃபஸாதஹுமுல்லாஹு மரழா'** எனக் கூறியிருக்கிறான். (அவர்களின் உள்ளங்களில் நோய் உள்ளது; அல்லாஹ் அவர்களின் நோயை அதிகமாக்கி விட்டான்). எனவே நீங்கள் அல்லாஹ்விடமிருந்து தொடர்பை துண்டிப்பவர்களா காதிருக்கும் பொருட்டு நீங்கள் எப்போதும் இறையச்சத்தைக் கைக் கொள்ளுங்கள். அல்லாஹ்விடம் அவனுடைய அருளைத் தேடுங்கள். இறைவனுடைய ஜமாஅத்தில் இணைபவர் இறைவன் மீது எந்த நன்மையையும் செய்வதில்லை. மாறாக, அவருக்கு அதற்கான நல்வாய்ப்பை வழங்கியிருப்பது அல்லாஹ் அவர் மீது செய்த அருளும் கருணையும் ஆகும். அவன் ஒரு சமுதாயத்தை அழித்து விட்டு இன்னொன்றை உருவாக்கும் ஆற்றல் மிக்கவன். **இந்த காலம் லூத், நூஹின் காலத்தை ஒத்திருக்கிறது.** ஏதாவதொரு கடுமையான தண்டனை வருவதற்கு பதிலாக - உலகத்தை அழிப்பதற்கு பதிலாக அல்லாஹ் தனது அருளினாலும் கருணையினாலும் சீர்திருத்தத்தை

விரும்பினான். மேலும் இந்த ஜமாஅத்தை உருவாக்கினான்.''

இந்த போதனையைப் புரிவது நம் மீதும் மிகப் பெரும் பொறுப்பாகும். ஓர் இறை கொள்கையின் உண்மைநிலையைப் புரிய வேண்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''நமது ஜமாஅத் முதன் முதலில் தன்னிடத்தில் தூய மாறுதலை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். ஏனெனில், அவர்களுக்கு புத்துணர்ச்சியான இறைஞானம் கிடைக்கிறது. இறைஞானம் பற்றி வாதிட்டு விட்டு அதன்படி செல்லவில்லை என்றால், இது வெறும் வாய்ப்பேச்சுதான். எனவே நமது ஜமாஅத்தை, (ஜமாஅத் அல்லாத) மற்றவர்களின் சோம்பேறித்தனம் கவனமற்றவர்களாக ஆக்கி விட வேண்டாம்.''

அதாவது உலகத்தின் முன்மாதிரியைப் பார்த்து அவர்களுக்குப் பின்னால் செல்ல ஆரம்பித்து விடாதீர்கள்.

''அவர்களுக்கு (அவை) சோம்பேறித்தனத்திற்கான தைரியத்தை கொடுத்து விட வேண்டாம். அவர்களின் கடுமையான அன்பு அவர்களையும் கடுமையானதாக ஆக்கி விட வேண்டாம்.''

அதாவது ஜமாஅத் அல்லாதவர்களுக்கு அல்லாஹ்வின் பக்கம் - மார்க்கத்தின் பக்கம் அன்பு இல்லை. அவர்களைப் பார்த்து விட்டு நீங்களும் உங்கள் உள்ளங்களை கடுமையாக்கிக் கொள்ள வேண்டாம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''மனிதன் பல்வேறு ஆசைகளையும், விருப்பங்களையும் கொண்டுள்ளான். ஆனால் மறைவான இறை நியதி பற்றி யாருக்குத் தெரியும்? வாழ்க்கை என்பது ஆசைகளுக்கு ஏற்ப செல்வதில்லை. ஆசைகள் என்பது வேறு; இறை நியதி என்பது வேறு. மேலும் இறை நியதியாகிய அதுவே உண்மையானதாகும். இறைவனிடம் மனிதனைப் பற்றிய வரலாறு உண்மையானதாகும். அதில் என்ன எழுதியுள்ளது என்பது அவருக்கு என்ன தெரியும்? எனவே உள்ளத்தை விழிப்பூட்டி விழிப்பூட்டி சிந்திக்க வேண்டும்.''

எனவே எப்போதும் ஆய்வு செய்து கொண்டிருக்க வேண்டும். அல்லாஹ் நமக்கு ஓர் இறை கொள்கை பற்றிய சரியான ஞானத்தை வழங்குவானாக. மேலும் நமது ஒவ்வொரு செயலும் இறை திருப்தியைப் பெறும் முயற்சியை மேற்கொள்ளக் கூடியதாக ஆகட்டுமாக.

**Nazarath Nashr-o-Isha'ath, Qadian** **Translated By *O.M. Muzzammil Ahmad***